1982 செப்டம்பர் 10]

காப்பாரப்பட்டியில், இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண். 44—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரிக்கு அருகிலுள்ள காப்பாரப்பட்டியில் இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையம் செயல்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தெரியும்.

(ஆ) இங்கு இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம் இலாபகரமாக இயங்காததால் அது திருப்பத்தூருக்கு மாற்றப் பட்டுள்ளது.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, ஏற்கனவே இருந்த அந்த நிலையத்தை மீண்டும் செயல் படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அந்த உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, பால் குளிரூட்டு நிலையங்களின் பொறுப்பில் இருக்கும் இரண்டு அதிகாரிகள் தவிர மற்ற பணியாளர்கள் தினக்கூலிகளாக இருப்பதால் பல்வேறு தவறுகளும், முறைகேடுகளும் நடப்பதாக அரசுக்குத் தகவல் வந்து இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி சிங்கம்புணரி அருகில் உள்ள நிலயத்தைப் பற்றியதாக இருப்பதால், அதைப் பற்றி விவரம் தெரிந்தால் கேட்கலாம்.

மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்.

* வினா எண்: 45—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தற்பொழுது மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காயின் அளவு என்ன?

(ஆ) அதன் மூலம் நம் மாநில அரசுக்கு ஆண்டுக்கு வருவாய் எவ்வளவு கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 1980-81 சீசன்படி சுமார் 210 மெட்ரிக் டன்கள் ஆகும்.

(ஆ) மொத்தம் ரூ. 6,87,500.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஏலக்காய் அளவு 210 மெட்ரிக் டன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் மூலம் தமிழ்நாடு சர்க்காருக்கு மொத்தம் ரூ. 6,87,500 வருமானம் வந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சமீப காலமாக, தமிழகத்தில் ஏலக்காய் உற்பத்தியானது பூச்சி தொல்லையாலும், மற்றவற்றினாலும் பாதிக்கப்பட்டு அதனால் அவர்கள் மிகவும் நஷ்டம் அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில், அரசாங்கத்தில் இருந்து உதவி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மலைப்பயிர் மற்றும் தோட்டக்கலைத் துறை அது பற்றிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்பதை விளக்கமாக அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலக்காய் ஒரு பாரின்—எக்ஸ்சேஞ்சு ஏர்னர். இதற்கு முன்னாலே தமிழ்நாட்டிலே அதை லீஸ் லேண்ட் என்று கொடுத்து, அதிலே ஏலக்காய் பயிர் செய்து வந்தார்கள். அதனால் நமக்கு அதிகமான அளவிற்கு வருமானம் வந்து கொண்டு இருக்கிறது. இப்போது லீஸ் லேண்ட் கொடுப்பது நிறுத்தப்பட்டு விட்டது. அதனால் வருமானம் குறைந்து இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்த லீஸ் லேண்ட் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் சிந்தித்துப் பார்த்து, அதை நடைமுறைப் படுத்தி, அதன் மூலம் அந்த வருமானத்தை அதிகரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி இந்தத் துறையைப் பொறுத்தது அல்ல. அவருடைய யோசனை அரசு அளவிலே முடிவு செய்ய வேண்டும். அரசு அளவிலே, அது பற்றி ஆராயலாம்.